The Hon. Sri C. SUBRAMANIAM : இவைகளெல்லாம் குழந்தைகள் விளையாடுவதற்காக ஏற்பட்டவை. இதிலே ரொம்பவும் அபாயகரமான வெடிகளை எதுவும் தயாரிக்கக்கூடாது என்று இப்பொழுது உத்தரவு இருக்கிறது. சாதாரணமாக எந்த விதத்திலும் தீங்கிழைக்காத வெடிகளை தயார் செய்து குழந்தைகள் விளையாடுவதை நாம் தடை செய்யவேண்டாமென்று நான் நினைக்கிறேன்.

Sri A. GOVINDASWAMY NAYAGAR : தீபாவளி சமயத்தில் நமது ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபொழுது அந்த நேரத்திலே தீபாவளி கொண்டாட்டத்திலே அவர் பட்டாசு வெடித்தாரா ?

DEPUTY SPEAKER : How is it relevant? I dissallow it.

Sri P. RANGASAMY REDDIAR : இதற்கு முன்பெல்லாம் ஓலை வெடி, யானை வெடி என்று காதிலுள்ள ஜவ்வுபிய்ந்து போகின்ற அளவிலே தயார்செய்யப்பட்டு வெடித்துவரப்பட்டது. இந்த வருஷத்தில் புது மாதிரியாக அணு குண்டு என்று ஒரு பட்டாசு தயார் செய்து அதை விற்று வருகிறார்கள். இம்மாதிரி பட்டாசுகள் வெடிக்கப்படுவதால் குழந்தைகளும் பெரியவர்களும் அநியாயமாய் மடிகிறார்கள். அதைத் தவிர இது சுகாதாரத்திற்கும் பெரிய இடைஞ்சலாகவும் மனிதர்களின் காது கொஞ்ச காலத்திற்காவது கூடிய வரையில் ரிபேர் இல்லாமல் பாதுகாக்கப் படக்கூடாத நிலைமையிலும் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதை கண்டிப்பாக தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இங்கு போடப்பட்டிருக்கிற கேள்வி பட்டாசு வெடிப்பதைப்பற்றி அல்ல. சட்ட விரோதமாக வெடி மருந்து சாலைகளை வைத்துக்கொண்டு அதிலிருந்து வெடிகளும் மற்ற சாமான்களும் செய்வதை தடுப்பதுபற்றி தான் கேள்வி. பட்டாசு வெடித்து விபத்து ஏற்படுவதைப்பற்றி கேள்வி அல்ல.

Sri S. R. ARUMUGAM : பட்டாசை வெடித்து காசை கரியாக்கும் நிலைமையை மாற்ற பட்டாசு உற்பத்தியையே தடை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அப்படியென்றால் சிகரெட் குடித்து காசை புகையாகச் செய்வதையும் கூட தடுக்கவேண்டும். இந்த விஷயங்களையெல்லாம் அவரவர்கள் இஷ்டத்துக்கு விட்டுவிடுவதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன்.

Sale of crackers and colour matches

9-40 a.m. * 441 *Q.*—Sri P. RANGASAMY REDDIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the sale of crackers and colour matches has been prohibited in the Bazaar streets at Tiruchirappalli from 31st October 1956; and

(*b*) if so, the authority that issued the orders and the reasons therefor?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sales-tax on coconut

* 442 *Q.*—Sri M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether coconut has been declared as an essential article of food by the Union Government;

27th December 1956]

(b) whether the Madras Provincial Coconut Merchants and Producers Association has made any representation, dated 2nd September 1956, to this Government for the removal of sales-tax on coconut trade; and

(c) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No.

(b) Yes. The representation is dated 9th August 1956.

(c) The matter is under the consideration of the Government.

SRI M. D. THIAGARAJA PILLAI : மலபார் ஜில்லாவானது நம் தமிழ் நாட்டிலிருந்து பிரிந்து போன பிறகு அதிகமான கொப்பரா, தேங்காய் இவைகளிலிருந்ததுள்ள விற்பனை வரி குறைந்துவிட்டது. அதனால் அரசாங்கம் இதைக் கவனித்து இதை உற்பத்தி செய்கிறவர்களுக்கும், இவ் வியாபாரிகளுக்கும் சௌகரியமாய் இருக்க இந்த விற்பனை வரியை எடுப்பதற்கு சீக்கிரம் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மலபார் பிரிந்து போனதால் இதன் மூலம் கிடைத்திருந்த விற்பனை வரி குறைந்தது உண்மையே. இது விஷயம் இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

SRI R. KRISHNASWAMI NAIDU : தேங்காயைப் போல், பருத்திக் கொட்டைக்கும் ஒரு முனை விற்பனை வரி ஏற்படுத்தவேண்டுமென்று பல ஆண்டுகளாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது சாத்தியந்தான். ஆகவே, இதையும் ஒரு-முனை வரியில் சேர்க்க அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தேங்காயும், பருத்திக் கொட்டையும் மாத்திரமல்ல. இன்னும் சில வஸ்துக்களை ஒரு-முனை வரியின் கீழ் கொண்டுவரலாமா என்பது யோசனையில் இருக்கிறது.

SRI V. K. RAMASWAMI MUDALIAR : இதுபற்றி பிரசாரம் ரொம்ப நாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. அரசாங்கத்தார் எப்பொழுதுதான் இதற்கு ஒரு முடிவு கட்டுவார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முடிவு செய்த வஸ்துக்களுக்கே மசோதா கொண்டுவர தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. அது இப்பொழுதுதான் பிரசுரமாகியிருக்கிறது. அங்கத்தினர் சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

SRI S. RAMALINGAM : போன ஆண்டில் அழுகல் சாமான்களுக்கெல்லாம் விற்பனை வரியை ரத்து செய்தார்கள். தேங்காய் அழுகல் சாமான் இனத்தைச் சேர்ந்ததுமல்ல, அழுகாத சாமான்களின் இனத்தைச் சேர்ந்ததுமல்ல. பத்து நாட்கள் இருந்தால் அழுகும், ஐந்து நாட்கள் இருந்தால் அழுகாது. இது இரண்டும் கெட்டானாய் இருக்கிறது. அதை தேர்தலிற்குள் எடுப்பதற்கு சர்க்கார் யோசிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பத்து நாட்கள் இருந்தால் அழுகுகிறதா, ஐந்து நாட்கள் இருந்தால் அழுகவில்லையா என்பதல்ல பிரச்னை. அழுகுகிற சாமான்களின் கூட்டத்தில் தேங்காயையும் பாலையும் சேர்த்திருக்கிறது.

Deputy Inspectors-General of Police

* 443 Q.—SRI S. PANCHAKSHARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of Deputy Inspectors-General of Police in the State after 1st November 1956; and